IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
**OS.No. 78/2020**

| | | **DEPOSITION OF WITNESS** | **PW.5** |
|---|---|---|---|
| NAME | ரேணு | TALUK | பேர்ணாம்பட் |
| FATHER NAME | அய்யாசாமி | RELIGION | இந்து |
| AGE | 56 | CASTE | |
| VILLAGE | மேல்வழிதுணையாங்குப்பம் | OCCUPATION | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 31.01.2024

வாதி தரப்பு முதல் விசாரணை

1. எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்பப்பட்டது. 23.11.2007 தேதியன்று மாயவேல் என்பவருக்கும் காண்ட்ராக்டர் சுப்பிரமணி என்பவருக்கும் மேல்வழிதுணையாங்குப்பம் கிராமத்தில் கெங்கையம்மன் கோவிலில் இடித்து புதிதாக கட்ட மேல்சிலை இராஜகோபுரம் ஆகியவை அமைத்து தர கட்டிட காண்ட்ராக்ட் ஒப்பந்த பத்திரத்தில் சாட்சி கையெழுத்து குறித்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்பப்பட்டது.

2. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ஒப்பந்த பத்திரத்தில் கடைசி பக்கத்தில் சாட்சிகள் என்ற இடத்தில் 3 வது இடத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மாயவேலுக்கும், சுப்பிரமணிக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தில் நான் சாட்சியாக கையொப்பம் இட்டேன். மேல்வழிதுணையாங்குப்பம் கெங்கையம்மன் கோயிலில் இராஜ கோபுரம் கட்ட ரூபாய்.7,46,000 தொகை பேசி ஒப்பந்தம் போடப்பட்டு முன்பணமாக ரூபாய்.3,00,000 மாயவேலு சுப்பரமணிக்கு கொடுத்தார்.

3.என்னுடன் ஒப்பந்த பத்திரத்தில் சாட்சியாக வேலு மற்றும் வேல்முருகன் ஆகியோர்கள் கையொப்பம் இட்டார்கள். குடியாத்தம் தாலுக்கா அலுவலகத்தில் பத்திரம் எழுதப்பட்டது.

4. ஒப்பந்தம் செய்த பொழுது எங்களுடன் சுப்பிரமணி மகள் உடன் இருந்தார். அவரின் பெயர் எனக்கு தெரியாது.

**Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.**

**Sd/.M.N.Rajananhivarmasiva,**
**District Munsif,**
**Gudiyattam.**